## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை
## (29.10.2022முதல் 02.11.2022 )

**அறிக்கைஎண் 086/2022** **தேதி.28.10.2022**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 5°செ முதல் 10°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 25.10.22 முதல் 27.10.22 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 20°செ முதல் 23°செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 76 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-7 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (25.10.2022 முதல் 27.10.2022) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 02.11..2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 25/10 | 26/10 | 27/10 | தேதி | நாள்-1 29/10 | நாள்-2 30/10 | நாள்-3 31/10 | நாள்-4 01/11 | நாள்- 02/1 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 8 | 6 | 4 | 15 |
| 31 | 31 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 31 | 30 | 29 |
| 23 | 20 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 19 | 20 | 21 | 21 | 20 |
| 5 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 6 | 6 | 6 | 7 |
| 78 | 82 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 85 |
| 55 | 45 | 48 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 55 | 65 | 65 | 60 | 65 |
| 7 | 7 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 180 | 180 | 70 | காற்றுவீசும் திசை | 70 | 360 | 320 | 320 | 320 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (29.10.2022 முதல் 02.11.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். 30.10.22, 31.10.22 01.11.22 மற்றும் 02.11.22 ஆகிய தேதியில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ முதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மெடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 29-10-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 1.0 |
| 30-10-2022 | 7.0 | 7.0 | 6.0 | 10.0 | 7.0 | 6.0 | 8.0 | 6.0 | 6.0 | 9.0 | 6.0 | 9.0 | 18.0 | 9.0 |
| 31-10-2022 | 5.0 | 6.0 | 4.0 | 11.0 | 6.0 | 4.0 | 7.0 | 5.0 | 4.0 | 9.0 | 5.0 | 10.0 | 12.0 | 9.0 |
| 01-11-2022 | 1.0 | 1.0 | 1.0 | 3.0 | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 | 2.0 | 2.0 | 1.0 |
| 02-11-2022 | 15.0 | 16.0 | 13.0 | 24.0 | 14.0 | 13.0 | 16.0 | 13.0 | 13.0 | 16.0 | 13.0 | 21.0 | 33.0 | 19.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட (அ) தூறல் மழையுடன் காற்றின் வேகம் 6 - 8 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. குறைந்தபட்ச வெப்பநிலை 20$^0$ செ க்கு குறைவாக நிலவ வாய்ப்புள்ளது. பயிர்களுக்கு மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும்.<br>தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் மழையில்லா நேரங்களில் உரமிடல் மற்றும் மருந்து தெளித்தலை மேற்கொள்ளலாம். |
| நெல் | விதைப்பு, வளர் மற்றும் பூக்கும் பருவம் | நிலவும் வானிலையால் நெல்லில் பேக்டீரியா இலைக்கருகல் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு எக்டருக்கு காப்பர் ஹைட்ராக்ஸைடு 1250 கிராம் (அ) ஸ்டெரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்கிளின் கலந்த கலவை 300 கிராமுடன் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1250 கிராம் கலந்து தெளிக்கவும்.<br>சம்பா நெற்பயிர் தூர்பிடிக்கும் தருணத்தில் இருப்பதால், தூறல் மழையினைப் பயன்படுத்தி எக்டருக்கு 38 கிலோ தழைசத்தை மேலுரமாக இடவும். |
| பருத்தி | விதைப்பு | கடந்த வாரம் வரையிலான தொடர் மழையினால் பருத்தியில் இலை சிவப்பு ஆவதை தடுப்பதற்கு வறண்ட வானிலையில் 5 சத மாங்னிசீயம் சல்பேட், யூரியா 1 சதம் மற்றும் சிங்சல்பேட் 0.1 சதம் கலந்து பருத்தி விதைத்த 50 மற்றும் 80-வது நாள் தெளிக்கவும்.<br>தூறல் மழையினைப் பயன்படுத்தி இறவை குளிர்கால கம்போடியா பருத்திக்கு எக்டருக்கு 40 கிலோ தழைசத்து மற்றும் 40 கிலோ சாம்பல்சத்தும் இடவும், தொடர்ந்து மண் அணைக்கவும். |
| மாமரம் | | கடந்த வாரம் வரையிலான தொடர் மழையினால் மாமரத்தின் அதிக தழை வளர்ச்சியை கட்டுப்படுத்த 1 சதம் பொட்டாசியம் நைட்ரேட் அல்லது பேக்குளோபூட்ரசேல் என்ற மருந்தை ஒரு மரத்திற்கு 10 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| வாழை | | கடந்த வார வானிலை காரணமாக, வாழையில் சிக்காடாகோ இலைப்புள்ளி நோய் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து லிட்டருக்கு 1 கிராம் கார்பன்டசிம் (அல்லது) 2 கிராம் மான்கோசெப் மருந்தை 0.5 மில்லி டீப்பாலுடன் கலந்து தெளிக்கவும். |
| கொடி வகை காய்கறிகள் | பூக்கும் பருவம் | கடந்த வாரம் வரையிலான தொடர் மழையினால் பூக்கும் பருவத்தில் உள்ள கொடி வகை காய்கறிகளில் அதிக தழை வளர்ச்சி காணப்படும். இதனால் பூ பிடித்தலை அதிகரிக்க எத்திரல் என்ற வளர்ச்சி ஊக்கியை பீர்க்கங்காய் தவிர மற்ற எல்லா கொடி வகைப் பயிர்களுக்கும் தெளிக்கவும். இதை இரண்டு முறை ஒரு வார இடைவெளியில் தெளிக்கவும். |
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் பருவம் | நிலவும் வானிலையால் மஞ்சளில் இலைக்கருகல் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே இதை கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும். |
| கால்நடைகள் | | குறைந்தபட்ச வெப்பநிலை $20^0$ செ க்கு குறைவாக நிலவ வாய்ப்புள்ளதாலும் அதிக காற்றின் ஈரப்பதத்தினாலும் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை தவிர்க்க சுத்தமான குடிநீரினை அடிக்கடி வழங்கவும். மழை காலங்களில் கோமாரி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் அதற்கு தடுப்பூசி போடவும். நீரினால் ஏற்படும் நோய்களை தவிர்க்க கால்நடைகள் வெளியில் தேங்கியுள்ள தண்ணீர் அருந்துவதை தவிர்த்து போதிய அளவு சுத்தமான குடிநீரினை கால்நடைகளுக்கு வழங்கவும். |

**குறுஞ்செய்தி**

- குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக காற்றின் ஈரப்பதத்தினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை தவிர்க்க சுத்தமான குடிநீரினை அடிக்கடி வழங்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**